# “பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்!”

## (கழகத் தலைவர் பொறுப்பேற்ற நாள் இன்று - 28.8.2018)






**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்


தி.மு.க. தலைவராகப் பொறுப்பேற்று ஐந்தாண்டுகள் முடிந்து, ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தலைவர் தளபதிக்கு முதலில் கழகத் தொண்டர்கள் சார்பாக வாழ்த்துக்களை கூறிக் கொள்வோம்.

மகாகவி பாரதியின் பாடலைச் சற்று மாற்றி எழுதி “பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம். எங்கள் பைந்தமிழ்-நாடென்று தோள் கொட்டுவோம்”-என்று பாட வேண்டிய கட்டாயம் நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. காரணம், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற ஒரு சாமானியர், ஆளுநர் மாளிகையில் பதவி பொறுப்பு ஏற்ற நாள் அன்றே, கோட்டையின் வாசலைத் திறந்து உள்ளே சென்று கால் பதித்த பின், சாதனையாளராக மாறித் தமிழ்நாட்டு மக்களுக்காகப் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியவராய் அற்புதங்கள் பல படைத்து வருகிறார். அந்தக் கோபாலபுரக் குடில் மைந்தன் படிப்படியாக, அதே நேரத்தில் அடுக்கடுக்காக -அதிசயமிக்கதாய், ஆரவாரமில்லாத வகையில், மலை போல் தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டி ஜெயபேரிகை கொட்டி முழங்கி வருகிறார்.

எவரும் எண்ணாத, எழுதிப் பார்க்காத,செய்யத் துணியாத மக்களுக்கான நலத் திட்டங்களையெல்லாம் தமது அறிவுரை மிக்க அதிகாரிகள் குழுவுடன் கலந்தாலோசனை செய்வதிலும், திட்டங்கள், சட்டங்கள் நடைமுறைப்படுத்திட முடிவெடுப்பதிலும், தீவிர முனைப்புக் காட்டி, வழிவகுத்து வருகிறார்.

அப்படி அவர் தீட்டிய பொற்காலத் திட்டங்களில் ஒன்றுதான், இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு முழுவதும் அரசு பள்ளிகளில் மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் திட்டம் என்பதாகும். இதனைத் திருவாரூர் பெருமை பேசும் திருக்குவளையாம் கலைஞர் எனும் சூரியன் உதித்த மண்ணில் தொடங்கி வைத்து, தமிழ்நாடு எங்கும் விரிவு படுத்தியுள்ளார் நமது முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுப் படுத்திடும் நோக்கமாகத் தமிழ்நாட்டிலுள்ள 31,008 பள்ளிகளில், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 17 லட்சம் அரசுப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையிலுள்ள அவர் படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்குக் இத் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பெருமை சேர்த்திருக்கிறார் முதல்வர்.

காலை உணவுத் திட்டத்தின் ஐந்து நோக்கங்களாகத் தளபதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

(1)மாணவர்கள் பசி இல்லாமல், பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும்.

(2)ஊட்டச்சத்துக் குறைபாட்டால், பாதிக்கப்படாமல் அந்த குழந்தைகள் இருக்க வேண்டும்.

(3)இரத்தசோகை என்ற குறைபாட்டை நீக்க வேண்டும்.

(4)மாணவர்களுடைய வருகைப் பதிவை அதிகரிக்க வேண்டும்.

(5)வேலைக்கு செல்கின்ற தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைக்க வேண்டும்.

இந்த ஐந்து நோக்கத்தைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் நம்முடைய இலட்சியம். இதனை. முழுமையாக அடைந்தே தீருவோம், அதில் எந்தச் சந்தேகமும் கிடையாது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

“உறு பசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு.” எனும் வள்ளுவரின் குறள் உணர்ந்து, நாட்டு மக்களை நாடி பிடித்துக் காப்பாற்றிடப் பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டிச் செங்கோலாட்சி செய்து வருகிறார் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின்.

“ஈ என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர் ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று; கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர் கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று; “என்பன போன்ற பொன்னே போல் போற்றும் நன்மொழிக் களஞ்சியப் புறநானூறாகச் சிற்றம்பலம் ஏறிச் சிறப்புகள் செய்து வருகிறார் அந்தத் திருக்குவளை வாரிசு பெற்ற பேரன்.’ புவனம் பேசிடப் புத்தெழில் தளும்பிடக் கல்விக் கூடங்களில் கவனம் பதித்துள்ளார். சிறார்களுக்குக் கல்வி அளிப்பது மட்டுமல்ல; கடும்பசி போக்கிடச் சிற்றுண்டி அளித்துப் புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறார் முத்துவேலரின் பேரனான அவர். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அபய குரலாக ஓங்கி எழுப்புவதால், அவர் அறச் சான்றோனாக காட்சியளிக்கிறார்

“யான் இரப்பவை பொருளும்,பொன்னும், போகமும் அல்ல; நின்பால் அருளும், அன்பும், அறனும் மூன்றும்”.... என அமைச்சர் பெருமக்களை:அரசு பணியாளர்களை; கழகத் தொண்டர்களை பொதுமக்கள் களத்தில் இறங்கி வேலை செய்ய நாளும் கட்டளையிட்டு, கடமையை ஆற்றிட வேண்டிப் பரிபாடல் வரிகளாகப் பரிணமிக்கிறார்.

அவர் சாதாரண மனிதர்தாம்: மிக, மிக, மிகச் சாமானிய சமுதாயத்தில் பிறந்து-சஞ்சீவி போல் வளர்ந்து சாதனை பல நிகழ்த்திய கலைஞரின் மடிதவழ்ந்து; தியாகத் தழும்புகள் காய்த்தத் தோள் பற்றிக் கிடந்து - அறிவுடை ஆன்றோரால் அடையாளம் காட்டப்பட்ட அருந்தமிழ்ப் புதல்வர்தாம் மு.க.ஸ்டாலின்.

“நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர் தலை யுலகம்”.... என்று புறநானூறு கூறுகிறது பூந்தமிழ் வாக்கு. எனவே,ஆள்வோர் அதனைச் செய்ய எண்ணி விழைய வேண்டும் .அவ்வழியில் தளபதியோ, ஆட்சிக் கட்டில் ஏறி, மக்களின் மனத்தில் ஆள்வோனாக மாறிக் காவலனாக இருந்து வருவதுடன், கடமையாற்றும் காதலனாகவும் கசிந்துருகிக் கை தூக்கி விடுவதில் தலை நிமிர்ந்து நிற்கிறார்.

“உண்பது நாழி; உடுப்பவை இரண்டே பிறவும் எல்லா ஓர் ஒக்கும்மே “...எனக் காலமறிந்து கடமையாற்றுகிறார் தளபதி. “யாதும் ஊரே; யாவரும் கேளிர்”... என்ற கணியன் பூங்குன்றனாரின் வைர வரிகளுக்கு ஏற்ப, மாந்தர் குல உறவுகளுக்காகத் தாகத்தைத் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தலாக விருந்து படைக்கிறார். அரசியலில் வெஞ்சமர்ப் புரியும் பகைவர்களாக எவர் இருந்தாலும், மக்கள் பணியில் ஒரு தாய் மக்களாக எண்ணி,அவர்கள் அனைவரையும் அரவணைத்துப் பணியாற்றுவதில். அஞ்சுகத் தாயின் பேரனாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.

“இன்னாது அம்ம இவ்வுலகம்; இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே”. என்று துன்ப நோயகற்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போல் நீதி வழங்குவதில் ஆளுமை படைக்கிறார்.

“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும், அல்லது செய்தல் ஓம்புமின்”- என்று அரசுக்கு விருட்சமாக விரிந்துயரந்து, விசிறியாகி வேர்வை துடைக்கும் வேந்தராக அவதாரம் எடுத்துள்ளார்.

தீயினுள் தென்றல் நீ,; பூவினுள் நாற்றம் நீ,; கல்லுனுள் மணியும் நீ, சொல்லுனுள் வாய்மை நீ; அறத்தினுள் அன்பும் நீ;மறத்துனுள் மைந்து நீ; வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ; வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களும் அளியும் நீ; அனைத்தும் நீ; அனைத்தின் உட்பொருளும் நீ “...என்று பரிபாடல் மூலமாக, தாம் வணங்கும் தெய்வத்தின் பெருமையாகக் கடுவன் இளம் வெயினார் கலங்கிக் காதலித்துக் கவிதை வடித்திருப்பாரே. அதனைப் போல, தமிழ் மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து உயர்ந்து ததும்பிச் சிரபுஞ்சியாய்ப் பேசப்படுகிறவர்தாம் இன்றைய முதல்வர் தளபதி.

“சங்கறுப்பது எங்கள் குலம்; சங்கரனார்க்கு ஏது குலம்” - என்று முழக்கமிட்டு நிமிர்ந்து நின்று நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே” ... என்று சிவபெருமானை எதிர்க்கும் நக்கீரரைப் போன்று இந்த நாட்டை சூறையாடும் மோடிகளை அவர்களின் கூட்டாளிகளின் நிர்வாகச் சீர்கேடுகளை, அவ்வப்போது அம்பலப்படுத்துகிறார். “பிறத்தலும் ,மூத்தலும், பிணிபட்டு இரங்கலும், இறத்தலும் உடைவது இடும்பைக் கொள் கலம் மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்” - என்றே மணிமேகலையில் நிலையாமை அறிந்து மக்களுக்கு நல்லறம் செய்யத் தண்டமிழ் சாத்தனார் செப்புவார்.

“உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தவராம்” - என அன்புடைத் தோன்றலாகவும், ஆருயிர் நிற்றலாகவும், தமிழர்க் குடும்பம் காக்கும் குலத் தலைவனாகவும், ஏழையர் ஏந்தலாகவும், வரையாது வாரி வழங்கும் வள்ளலாகவும், உருவெடுத்து வாழ்பவராக அனைவரும் உள்ளக் கிடக்கையில் உறைந்து கிடக்கிறார் தளபதி.

புன்னெறி கொண்ட நஞ்சு எண்ணச் செங்கோட்டைச் சேதாரமான நாற்காலிகளுக்கு நன்னெறி காட்டும் நம்பியாக நகர்வலம் வருகிறார் நாயகர் மு.க. ஸ்டாலின். “செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”... எனக் கூறும் குறுந்தொகை பாடலில் காதலர்களாக, அன்பின் வளர்ச்சியை -ஆழத்தை- உயரத்தைத் தமிழக மக்களின் மனத்தில் கலந்து, மதி ஒளியைப் போல் வீசி, மங்காப் புகழ் படைத்தவராக எழுதிக் கொண்டு இருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

“அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது இது கேள்; மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும், உடையும், உறையுளும் அல்லது கண்டதில்.”.... எனவும் கூறுவாரே! அவ்வாறு பள்ளிக் குழந்தைச் செல்வங்களை அறிந்து, அறநெறி நின்றே அளப்பரிய பணிகள் செய்து வரும் தளபதி அவர்களை அன்றே கலைஞர் உச்சி முகர்ந்து பாராட்டிய கழகப் பாசறைத் தலைவனாக அல்லவா அவரைக் காட்டிச் சென்றிருக்கிறார்.

“பசியில்லாகுக பிணி சேண் நீங்குக” -எனவும், “அறம், நனிசிறக்க அல்லது கெடுக”.. -எனவும், “நன்று பெரிது சிறக்க, தீது இல்லாகுக” எனவும் சங்க இலக்கிய வைர வரிகளில் தோய்ந்தவராகத் தொடர்கிறார் முரசங் கொட்டி அரசுப்பணியில் நமது தளபதி முதல்வர் அவர்கள்.

“ஈதல் இசைபட வேண்டின் அதுவல்லது ஊதியமில்லை உயிர்க்கு” -எனும் குறள் மொழிக்குப் பொருளுரையாகப் பத உரையாக -பொழிப்புரையாக- புகழுரையாக விளங்கி வரும் அவரோ, புவியில் உழன்று வாழும் சாமானிய மக்களின் நெஞ்சம் தாங்கும் தானைத் தலைவர் அல்லவா?

“ஆற்றுதல் “என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்;” போற்றுதல்” என்பது புணர்ந்தாரைப் பிரியாமை; “பண்பு” எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல், ‘அன்பு’ -எனப்படுவது தன்கிளை செறாஅமை; “அறிவு” எனப்படுவது பேதையர்ச் சொல் நோன்றல்; “செறிவு” எனப்படுவது கூறியது மறாஅமை; “நிறை” எனப்படுவது மறை பிறர் அறியாமை; “முறை” எனப்படுவது கண் ணோடாது உயிர் வௌவல்; “பொறை “ எனப்படுவது போற்றோரைப் பொறுத்தல் என்று கலித்தொகை நூலில் ஆற்றுதல் முதல் பொறை வரையுள்ள ஒன்பது பண்புகளைக் கூறுகிற படியால், அவற்றைக் கொண்டவரே உயர்ந்தோரினும் உயர்வுடையவராகத் திகழ்வார் என்று புலவர் நல்லந்துவனார் நவில்கின்ற நவமணிச் சொத்து. அந்தப் பொருட்பண்புகளைச் சீரியச் சொத்தாகத் தளபதி அவர்கள் மேற்கொண்டு மக்களுக்காக ஆற்றும் பணியில் அறம் போற்றும் அரியதோர் அன்பராகத் திகழ்கிறார்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்”, பசியினால் இளைத்தே, வீடு தோறும் இரந்தும் பசி அறாது அயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்! நீடிய பிணியால் வருந்துகின் றோர்என் நேருறக் கண்டுளம் துடித்தேன்! ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு இளைத்தவர் தமைக் கண்டு இளைத்தேன்!

இப்பாடலைத் தந்த அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அவர்களின் வரிப்பொருளறிந்து, பசித் துன்பம் நீக்கும் வடிவமாகத் திகழும் அவர்; இன்று பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்வதாகவும், தமிழ்நாடு மக்கள் கும்பிடும் நடமாடும் தெய்வமாகவும் தளபதி உயர்ந்து நிற்கிறார்.

உணவற்றவர்களாக - உறுபொருள் அற்றவர்களாக அல்லல்பட்டு அலையும் ஏழை ,எளிய ,அனாதை மக்களின் நிலை கண்டு மனந்துடித்த தமிழ்நாடு முதல்வர் தளபதி வள்ளலார் அவர்களின் மனம் கவர்ந்த மாமனிதராய்ப் போற்றப்படுகின்றார். துயரப்பட்டவர்களுக்கு உதவும் கரங்களாக, ஊன்றுகோலாக, உருவெடுத்து மக்கள் உள்ளத்தில் தங்கச் சிம்மாசனம் போட்டு வாழ்கிறார் தளபதி.

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில், இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி கொதித்துப் பாடியது போல, வலிமையற்ற தோளினராய்;மார்பிலே ஒடுங்கினவராய்;பொலிவிழந்த முகத்தினராய்; வாழ்விழந்த வலியினராய்; ஒலியிழந்த குரலினராய்; ஒளியிழந்த மேனியின ராய்; கிலி பிடித்த நெஞ்சினராய்; இப்படி நோயில் வீழ்ந்து கிடக்கும் மக்களை எல்லாம் விரல் பிடித்துத் தூக்கி விட்டு ஆரத்தழுவும் வேந்தராக அல்லவா இன்று கோட்டையில் ஆட்சி நடத்தி வருகிறார்.

ஒளி படைத்த கண்ணினாய் உறுதி கொண்ட உள்ளத்தினாய் - களி படைத்த மொழியினாய் கடுமை கொண்ட தோளினாய் - தெளிவு படைத்த மதியினாய் - சிறுமை கண்டு பொங்குபவனாய் எளிமை கண்டு இரங்குபவனாய்-ஏறு போல்நடையினாய் -அரசு எந்திரத் துறைகளைத் தட்டியெழுப்பி மக்களுக்கு உதவும் அமுதசுரபி மணிமேகலையாய் இன்று வடிவம் எடுத்து வறிவர்களுக்கெல்லாம் வசந்தம் அல்லவா தந்து கொண்டிருக்கிறார்.

அவர் குமணன் அல்லர் தலைகொடுக்க: ‘ஆனால், தலைமுறை வாழ்க்கை தழைத்து வெற்றி பெறத் தனது கைகளைக் கொடுத்துதவி உணவு - உடையளிக்கிறார்.

அவர் மன்னன் பேகன் அல்லர்-குளிரில் வாடிய மயிலுக்குப் போர்வை அளிக்க; ஆனால், வறுமையில் வாடும் மக்களை வாரி அனைத்துப் பசிப்பிணி போக்கி வருகிறார்! அவர் மன்னன் பாரியல்லர்-வளரும் கொம்பின்றித் தவித்த முல்லைக்குத் தேர் தந்து உதவிட; ஆனால், வாடிக்கிடக்கும் தெருவோரத்து மக்களுக்குத் தேடும் பொருள் தந்து தெய்வமாய் உயர்ந்த மாமனிதரென நிமிர்ந்து நிற்கிறார்! இதோ தொடக்கப்பள்ளிகள் தோறும் மாணவ- மாணவியருக்குப் பசி போக்கும் உணவுக் களஞ்சியத்தால் உயிர் தந்து கொண்டிருக்கிறார். தொடரட்டும் அவரது தொண்டு. நாம் ஆனந்தப் பள்ளு பாடுவோம் மக்களின் மகிழ்ச்சி கண்டு.



மதுரை மாவட்டம் திருமங்கலம் அடுத்துள்ள அம்மாபட்டி அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் கோரிக்கையை ஏற்று பள்ளி வளர்ச்சி திட்டத்திற்காக கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒரு லட்ச ரூபாய் நிதி உதவியை மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் நேரில் வழங்கினார். இதில் ஒன்றியச் செயலாளர்கள் கொ.தனபாண்டியன், ஆலம்பட்டி சண்முகம், மாவட்டக் கவுன்சிலர் ஜெயராஜ், திருமங்கலம் நகர் மன்ற தலைவர் ரம்யாமுத்துக்குமார், தகவல் தொழில்நுட்ப மண்டல அமைப்பாளர் பாசபிரபு, இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆதவன் ஜெகதீஷ் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், பொதுமக்கள், தி.மு.க. நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதுரை ரயில் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடலுக்கு தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் பிரவீன்குமார் உள்ளனர்.